வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: சரவணகுமார்

தேதி: 10.02.2025 நேரம்: மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவிற்கு 4 நாள் பயணமாக இன்று புறப்பட்டுச் சென்றார்.

மாணவர்களுக்கு தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் சுதந்திரம் இருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

15ஆவது ஏரோ – இந்தியா விமானக் கண்காட்சியை பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று பெங்களூருவில் தொடக்கி வைத்தார்.

மாணவர்கள், ஊக்கத்துடன் படித்து, தன்னம்பிக்கையுடன் தேர்வை எழுத வேண்டும் என புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார்.

--------------------------

*மோடி-பயணம்* (13)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரான்ஸ் மற்றும் அமெரிக்க நாடுகளுக்கு அரசு முறைப் பயணமாக இன்று புறப்பட்டுச் சென்றார். முதலில், பிரான்ஸ் நாட்டிற்கு செல்லும் பிரதமர், அந்நாட்டு அதிபர் இமானுவேல் மேக்ரானுடன் இணைந்து, நாளை நடைபெற உள்ள செயற்கை

நுண்ணறிவு குறித்த உச்சி மாநாட்டில் தலைமை உரையாற்றுகிறார். மேலும், மார்ஷெய்-லில், இந்தியாவின் புதிய துணைத் தூதரகத்தையும் திறந்து வைக்கிறார். 12ஆம் தேதி வரை பிரான்சில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பிரதமர் அதன்பிறகு 2 நாள் பயணமாக அமெரிக்கா புறப்பட்டு செல்கிறார். இந்தியாவில் இருந்து புறப்படும் முன்னர் பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்ட அறிக்கையில், தமது இந்த பயணம், பிரான்ஸ், அமெரிக்க நாடுகளுடனான நட்புறவை அதிகரிப்பதோடு, தொழில்நுட்பம், வர்த்தகம், பாதுகாப்பு உள்ளிட்டவைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்றும், தெரிவித்துள்ளார்.

-------------------------

மோடி-பரிக்ஷா 1 (18)

மாணவர்களுக்கு தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் சுதந்திரம் இருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். பொதுத் தேர்வுகளை, மாணவர்கள் மன அழுத்தம் இன்றி, எதிர்கொள்வது குறித்த பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று மாணவர்களுடன் கலந்துரையாடினார். இதுகுறித்து வெளியிடப்பட்ட காணொளிப் பதிவில், மாணவர்கள், தங்களுக்கு பிடித்த பாடங்களை ஆர்வத்துடன் கற்கும் போது, அவர்களது எதிர்காலம் சிறந்ததாக அமையும் என்று குறிப்பிட்டார். குழந்தைகள் தங்களுக்கு பிடித்த பாடங்களை படிப்பதற்கு பெற்றோர் அனுமதிக்க

வேண்டும் என்று கேட்டுக் கொண்ட பிரதமர், நெருக்கடியாக சூழ்நிலைகளில், மாணவர்கள் நேர்மறையாக சிந்திக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். மாணவர்கள் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே தேர்வுகளை சிறப்பாக எதிர்கொள்ள முடியும் என்பதால், சிறுதானியங்கள் காய்கறிகள் மற்றும் பழங்களை அதிக அளவில் உட்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மாணவர்கள் 4 சுவர்களுக்குள் அடைப்பட்ட இருக்க வேண்டாம் என்றும், தேர்வுகள்தான் எல்லாமே என்ற நெருக்கடியுடன் இருப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மாணவர்கள், ரோபோக்கள் அல்ல என்று

*மோடி-பரிக்ஷா 2 (14)*

எடுத்துரைத்த பிரதமர், புத்தகங்களில் சிக்கிக் கொண்டால், அவர்கள் வளர முடியாது என்றும் கூறினார். படிப்பதுடன் எழுதும் பழக்கத்தையும் மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். தூக்கம் என்பது உடல் ஆரோக்கியத்துடன் சம்பந்தப்பட்டது என்றும், மருத்துவ அறிவியல், தூக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது என்றும் கூறினார். பிரதமருடன் உரையாடலில் பங்கேற்ற, தெலங்கானாவைச் சேர்ந்த மாணவர் அலுவேலா சைதே ஜா கூறுகையில், பிரதமரின் வார்த்தைகள் ஊக்கமளிப்பதாகவும், தேர்வுகளை சிறப்பாக எதிர்கொள்ள தமக்கு நம்பிக்கை அளித்து இருப்பதாகவும் தெரிவித்தார். நாட்டின் திறமையான மற்றும் கடின உழைப்பாளியான பிரதமர், தங்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டும் என, ப்ரீத்தி பிஸ்வால் என்ற மாணவி திரு.

மோடியிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, பதில் அளித்த அவர், தேர்வு காலத்தில் எழும் மன அழுத்தும் மற்றும் சுய சந்தேகங்களை பொருட்படுத்தாமல், மாணவர்கள், நேர்மறையாக சிந்தித்து செயல்பட வேண்டும் என்றார்.

-------------------------

*குடியரசுத் தலைவர் 1 (17)*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று மஹா கும்பமேளாவில் உள்ள திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினார். கங்கை, யமுனை, மற்றும் சரஸ்வதி நதிகள் சங்கமிக்கும் புனித இடத்தில் பூஜை செய்து வழிபட்டார். உத்தரபிரதேச ஆளுநர் திருமதி ஆனந்தி பென் பட்டேல், முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இதுகுறித்து, குடியரசுத் தலைவர் வெளியிட்ட சமூக ஊடகப் பதிவில், மஹா கும்பமேளாவில் ஆர்வத்துடன் கலந்து கொள்ளும் மக்கள் திரளானது, இந்தியாவை வளமான கலாச்சார பாரம்பரியத்தில் துடிப்பான சின்னமாக விளங்குகிறது என்று குறிப்பிட்டுள்ளார். மஹா கும்பமேளா, மனித குலத்திற்கு ஒற்றுமை மற்றும் ஆன்மீகத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தவதாக, அமைந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். புனித நீராடுவதற்கு முன்னதாக, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, படகு மூலம் பயணம் செய்து சைபீரிய பறவைகளுக்கு உணவளித்தார். பிரயாக்ராஜில் உள்ள அக்ஷய் வாட் மற்றும் படே ஹனுமான் கோவிலுக்கு சென்று வழிபட்டார். பின்னர்,

டிஜிட்டல் மஹா கும்ப அனுபவ மையத்திற்கு சென்று, பார்வையிட்டார். இதற்கு முன் குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் மற்றும்

*குடியரசுத் தலைவர் 2 (4)*

பிரதமர் திரு. நரேந்திர மோடியும், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடினர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த மாதம் 13ஆம் தேதி தொடங்கி, இம்மாதம் 26ஆம் தேதி வரை நடைபெறும் இந்த மஹா கும்பமேளாவில் இதுவரை, 44 கோடிக்கும் அதிகமான பக்தர்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

--------------------------

*ராஜ்நாத் சிங் (9)*

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், 15ஆவது ஏரோ – இந்தியா விமானக் கண்காட்சியை இன்று பெங்களூருவில் தொடக்கி வைத்தார். அப்போது பேசிய அவர், இந்த விமானக் கண்காட்சி, நம் ராணுவத்தின் வலிமையையும், திறனையும், பறைசாற்றும் வகையில் உள்ளது என்றார். நடப்பு 2025ஆம் ஆண்டு, ராணுவ உற்பத்தியில் சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் ஆண்டாக அமையும் என்றார். நம் நாட்டின் ராணுவ உற்பத்தித் திறன் உலகின் முதல் 5 இடங்களில் உள்ளது என்றும், பொருளாதார வளர்ச்சியில் இது முக்கிய பங்காற்றுகிறது என்றும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

--------------------------

*புதுச்சேரி-பரிக்ஷா பே சர்ச்சா 1 (15)*

தேர்வுகளை மன அழுத்தம் இன்றி எதிர்கொள்வது குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுடெல்லியில் மாணவர்களுடன் கலந்துரையாடிய பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சி, இன்று, புதுச்சேரி கம்பன் கலையரங்கில், காணொளி வாயிலாக ஒளிப்பரப்பப்பட்டது. துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், சட்டப் பேரவை தலைவர் திரு. செல்வம், உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், தலைமைச் செயலர் டாக்டர் சரத் சவுகான் ஆகியோருடன் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மாணவிகள் இந்நிகழ்ச்சியை, கண்ணுற்றனர். பிரதமரின் கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு பின்னர் சிறப்புரையாற்றிய துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருப்பதால், மாணவர்கள், ஊக்கத்துடன் படித்து, தன்னம்பிக்கையுடன் தேர்வை எழுத வேண்டும் என கூறினார். குஜராத்தில், தாம் பணியாற்றிய போது அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகப்படுத்த அப்போது முதலமைச்சராக இருந்து பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட முயற்சிகள் குறித்து எடுத்துரைத்தார். அப்போது .....

(வாய்ஸ்)

*புதுச்சேரி-பரிக்ஷா பே சர்ச்சா 2 (16)*

இந்நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் திரு. செல்வம் பேசும் போது, மாணவர்கள், தேர்வுகளை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டும் என்பதற்காக, பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுடன் நட்புடன் உரையாடி, அவர்களை ஊக்கப்படுத்துவதாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கல்வி அமைச்சர் திரு. நமச்சிவாயம் பேசும் போது, அனைத்துத் தரப்பு மக்கள் குறித்தும் சிந்திக்கக் கூடிய தலைவராக பிரதமர் திரு. நரேந்திர மோடி விளங்குவதால்தான், மாணவ-மாணவிகளுடன் கலந்துரையாடி, அவர்களின் சந்தேகங்களை அக்கறையுடன் கேட்டு, சிறப்பான ஆலோசனைகளை வழங்க முடிவதாக கூறினார். புதுச்சேரியில் அரசுப் பள்ளி மாணவர்கள், நன்றாக கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணத்தில், ஆசிரியர் பணியிடங்கள் படிப்படியாக நிரப்பப்பட்டு வருவதாக தெரிவித்த அமைச்சர், விரைவில், பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்றார். கம்பன் கலையரங்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பிரதமர் மாணவர்களுடன் கலந்துரையாடிய காணொளியை, பார்த்து பயன் பெற்ற மாணவிகள் சிலர் எமது செய்தியாளரிடம் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

(வாய்ஸ்)

------------------------

*காரைக்கால் – பரிக்க்ஷா* (9)

பிரதமரின் பரிக்க்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியில், பிரதமருடன் கலந்துரையாட நாடு முழுவதிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ-மாணவிகளில், காரைக்காலைச் சேர்ந்த ரித்திகா என்ற மாணவியும் பங்கு பெற்றார். இதனையடுத்து, காரைக்கால் அன்னை தெரசா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒளிபரப்பப்பட்ட பிரதமரின் கலந்துரையாடல் நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சியர் திரு. சோம சேகர் அப்பாராவ்

பார்வையிட்டார். மேலும், கலந்துரையாடலின் போது பிரதமர் தெரிவித்த கருத்துக்களை மாவட்ட ஆட்சியர், மாணவிகளுக்கு புரியும் வகையில், தமிழிலும், ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்துக் கூறினார்.

--------------------------

*காரைக்கால் குடற்புழு* (6)

தேசிய குடற்புழு நீக்க தினம் இன்று கடைபிடிக்கப் பட்டதை ஒட்டி, காரைக்காலில், பிகே சாலையில் உள்ள அரசு ஆரம்ப பள்ளி மாணவர்களுக்கு, முதல்கட்டமாக மாவட்ட ஆட்சியர் திரு. சோம சேகர அப்பாராவ், குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கினார். அதனை தொடர்ந்து காரைக்கால் முழுவதும் 374 இடங்களில், 53 ஆயிரத்து 200 மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட்டன.

--------------------------

*கர்லிங் புதுச்சேரி* (7)

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் குல்மார்க்கில் தேசிய அளவிலான 4 ஆவது கர்லிங் போட்டி, கடந்த மாதம் 17ஆம் தேதி தொடங்கி, 20ஆம் தேதி வரை நடைபெற்றது. இதில் புதுச்சேரியைச் சேர்ந்த கர்லிங் வீரர்-வீராங்கனைகள் 10 பேர் பங்கேற்று, 6 வெள்ளிப் பத்க்கங்கள், 4 வெண்கலப் பதக்கங்களை வென்று, சாதனைப் படைத்தனர். பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்கள் இன்று சட்டப் பேரவையில் முதலமைச்சர் திரு. ரங்கசாமியை இன்று சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

--------------------------

*காரைக்கால் வேளாண் (5)*

காரைக்கால் மாவட்டம், மாத்தூரில் அமைந்துள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில், கிராமப்புற இளைஞர்களுக்கான அங்கக வேளாண்மை பற்றிய 6 நாள் திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் இன்று தொடங்கியது. இம்முகாமை, வேளாண் அறிவியல் நிலையத்தின் முதல்வர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ரவி துவக்கி வைத்தார்.

-------------------------

*ஜன் தன் கணக்கு (10)*

இந்த ஆண்டு ஜனவரி மாதம் வரையிலான கால கட்டத்தில், பிரதான் மந்திர ஜன் தன் யோஜனாவின் கீழ், நாடு முழுவதும் 54 கோடிக்கும் அதிகமான வங்கிக் கணக்குகள் தொடங்கப் பட்டுள்ளதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார். மக்களவையில் இன்று அவர் எழுத்துப் பூர்மாக அளித்த பதிலில், இதில், 30 கோடிக்கும் மேற்பட்ட கணக்குகளை மகளிர் தொடங்கி இருப்பதாகவும் தெரிவித்தார். பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனாவில், 22 கோடிக்கும் மேற்பட்ட மக்களும், பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனாவில் 49 கோடிக்கும் மேற்பட்டவர்கள் சேர்ந்துள்ளதாகவும், திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்துள்ளார்.

-------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவிற்கு 4 நாள் பயணமாக இன்று புறப்பட்டுச் சென்றார்.

மாணவர்களுக்கு தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் சுதந்திரம் இருக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

15ஆவது ஏரோ – இந்தியா விமானக் கண்காட்சியை பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இன்று பெங்களூருவில் தொடக்கி வைத்தார்.

மாணவர்கள், ஊக்கத்துடன் படித்து, தன்னம்பிக்கையுடன் தேர்வை எழுத வேண்டும் என புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன் கூறியுள்ளார்.